**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>சுருக்கமுறை விசாரணை வழக்கு எண் 378/2025</u>**

**<u>CNR NO.TNTU09-002353-2025</u>**

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவிஆய்வாளர், வாணியம்பாடி நகர காவல் நிலையம், குற்ற எண். 379/2023. |
| 2. | எதிரிகள் | விநாயகமூர்த்தி த/பெ.கோபி |
| 3. | குற்றம் | பிரிவுகள் 4(1)(a), 4(1)(h) TNP act. |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 06.06.2023 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 06.06.2023 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | 06.06.2023-09.06.2023 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 30.05.2025 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 03.03.2026 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | - |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1 - அ.சா.3-24.03.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)-ன் கீழ் வினவிய நாள் | 26.03.2026 |

| | | |
|---|---|---|
| 12 | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 27.03.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 255 (1) கீழ் விடுதலை. |

**<u>நீதித்துறை படிவம் எண்: 61</u>**

புகார்தாரர் : அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், வாணியம்பாடி நகர காவல் நிலையம்.

எதிரி : விநாயகமூர்த்தி த/பெ.கோபி

குற்றம் : பிரிவுகள் 4(1)(a), 4(1)(h) TNP act.

முடிவு : இறுதியாக அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரியை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 255 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரி பெயர் | தந்தை / கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1. | விநாயகமூர்த்தி | கோபி | இந்து | கூலி | கோணாமேடு | 33 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | உத்தரவு | |
| 06.06.23 | 06.06.23 | 06.06.23 | 09.06.23 | 03.03.26 | 26.03.26 | 27.03.26 | – |

இவ்வழக்கானது 29.05.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 26.03.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது

குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.உமர், M.A., B.L, அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

**<u>தீர்ப்புரை</u>**

**<u>1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கில் வாணியம்பாடி நகர காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கோணாமேடு VMC காலனியிடம் கடந்த 06.06.2023ம் தேதி பகல் 12.00 மணிக்கு எதிரி விநாயகமூர்த்தி எந்த விதமான அரசு அனுமதியும் பெறாமல் அரசு மதுபான பாட்டில்கள் 180 ML அளவு கொண்ட Old Secret XXX Rum – 4 பாட்டில்களும், 180 ML அளவு கொண்ட Old Monster XXX Rum – 2 பாட்டில்களும், MGM DIAMOND XXX RUM – 4 பாட்டில்களும் ஆக மொத்தம் 10 அரசு மதுபான பாட்டில்களை அதிய லாப நோக்கத்தோடு விற்பனை செய்ய வைத்துக்கொண்டிருந்தார். எனவே, எதிரியின் மீது 4(1)(a), 4(1)h தமிழ்நாடு மதுபான தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக வாணியம்பாடி நகர காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் 4(1)(a), 4(1)h தமிழ்நாடு மதுபான தடுப்புச் சட்டத்தின் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரி ஆஜரானதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க

போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(a), 4(1)h தமிழ்நாடு மதுபான தடுப்பு சட்டத்தின் கீழான குற்றத்தின் சாராம்சத்தை விளக்கி கூற வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.2** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>5. அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :</u>**

5(i) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3 திரு.ராஜ்குமார், காவல் உதவி ஆய்வாளர் கடந்த 06.06.2023ம் தேதி காலை 11.00 முதல் 11.30 மணிக்கு அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுடன் வாணியம்பாடி நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கோணாமேடு VMC காலனிக்கு மது விலக்கு சம்மந்தமாக பார்ட்டி சகிதமாக கண்காணித்து கொண்டு செல்லும்போது ஒரு நபர் காவலர்களை பார்த்ததும் ஓடியவரை அ.சா.1 மற்றும் அ.சா.2 துரத்தி பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் விநாயகமூர்த்தி என கூறியதாகவும், பின் அவர் எங்கிருந்து ஓடினாரோ அந்த இடம் அவருக்கு சொந்தமானது என்றும், அவர் வீட்டின் பின்பகுதியில் ஒரு சிமெண்ட் பையில் 10 பாட்டில்கள் Diamond Bottle –4, Secret Rum –4, Old Monster –2 இருந்ததாகவும், நான்கு பாட்டில்கள் மட்டும் மூடி சற்று திறந்த நிலையில் இருந்ததாகவும், பின் அவரை விசாரித்தபோது தெரியாமல் செய்துவிட்டதாகவும், மன்னித்து விடும்படியும் குற்றத்தை ஒப்புக்கொண்ட குற்றத்திற்காக அவரை 12.15 மணிக்கு கைது செய்து அவரது நண்பர் முத்துக்குமாருக்கு தகவல் தெரிவித்து அந்த இடத்தில் இருந்த 20 முதல் 30 நபர்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராத காரணத்தினால் போலிஸ் சாட்சிகளான முதல் நிலை காவலர் அ.சா.1 யுவராஜ்,

முதல் நிலை காவலர் அ.சா.2 நவீன்ராஜ் ஆகியோர் முன்னிலையில் வழக்கு சொத்தான 180 ML அளவு கொண்ட Old Secret XXX Rum – 4 பாட்டில்களும், 180 ML அளவு கொண்ட Old Monster XXX Rum – 2 பாட்டில்களும், MGM DIAMOND XXX RUM – 4 பாட்டில்கள் மொத்தம் 10 பாட்டில்கள் ஆகியவற்றை அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி அலுவலக வேலைகள் இருந்ததால் வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து வழக்கு சொத்து எண் பெற இயலவில்லை என்றும், எதிரி மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் சேர்ந்து எதிரியின் மீது நிலைய குற்ற எண் 379/2023 பிரிவுகள் 4(1)(a), 4(1)h தமிழ்நாடு மதுபான தடுப்புச் சட்டத்தின் கீழ் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து 06.06.2023ம் தேதி எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எனவே, வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீதான குற்றம் உண்மையென தெரியவந்ததால் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்ததை சாட்சிய சூழ்நிலைகளை எதிரியிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என்று கூறினார். மேலும் எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.**

7. அரசு தரப்பில் கடந்த 06.06.2023ம் தேதி பகல் 12.00 மணிக்கு எதிரி விநாயகமூர்த்தி எந்த விதமான அரசு அனுமதியும் பெறாமல் அரசு மதுபான

பாட்டில்கள் 180 ML அளவு கொண்ட Old Secret XXX Rum – 4 பாட்டில்களும், 180 ML அளவு கொண்ட Old Monster XXX Rum – 2 பாட்டில்களும், MGM DIAMOND XXX RUM – 4 பாட்டில்களும் ஆக மொத்தம் 10 அரசு மதுபான பாட்டில்களை அதிய லாப நோக்கத்தோடு விற்பனை செய்ய வைத்துக்கொண்டிருந்தாக அரசு தரப்பில் எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

8. வழக்கின் புலன் விசாரணை அதிகாரியால் எதிரிகளிடமிருந்து இருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றியபோது சாட்சியாக இருந்த யுவராஜ், முதல் நிலை காவலர் மற்றும் நவீன் ராஜ், இரண்டாம் நிலை காவலர் அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது நீதிமன்ற சாட்சியத்தின்போது புலன்விசாரணை அதிகாரியான திரு. ராஜ்குமார், காவல் உதவி ஆய்வாளர் என்பவருடன் மது விலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக சோதனைக்கு சென்றபோது காவலர்களை கண்டதும் ஓடிச்சென்ற நபரை மடக்கி பிடித்து விசாரித்து அவர் இருந்த இடத்தில் சோதனை செய்தபோது Old Secret XXX Rum – 4 பாட்டில்களும், Old Monster XXX Rum – 2 பாட்டில்களும், DIAMOND XXX RUM – 4 பாட்டில்கள் கைப்பற்றி அ.சா.3 ராஜ்குமார், காவல் உதவி ஆய்வாளர் தயாரித்த அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் ஆவணத்தில் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்ததை குறித்து, சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பது புலனாகிறது.

9. இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான ராஜ்குமார், காவல் உதவி ஆய்வாளர் அரசு தரப்பில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 06.06.2023ம் தேதி பகல் 11.00 முதல் 11.30 மணிக்கு கோணாமேடு VMC காலனிக்கு மது விலக்கு சம்மந்தமாக பார்ட்டி சகிதமாக கண்காணித்து கொண்டு செல்லும்போது ஒரு நபர் காவலர்களை பார்த்ததும் ஓடியவரை அ.சா.1 மற்றும் அ.சா.2 துரத்தி பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் விநாயகமூர்த்தி என கூறியதாகவும், பின் அவர் எங்கிருந்து ஓடினாரோ அந்த

இடம் அவருக்கு சொந்தமானது என்றும், அவர் வீட்டின் பின்பகுதியில் ஒரு சிமெண்ட் பையில் 10 பாட்டில்கள் Diamond Bottle –4, Secret Rum –4, Old Monster – 2 இருந்ததாகவும், நான்கு பாட்டில்கள் மட்டும் மூடி சற்று திறந்த நிலையில் இருந்ததை சாட்சிகள் அ.சா.1 திரு. யுவராஜ், முதல் நிலை காவலர் மற்றும் அ.சா.2 திரு. நவீன்ராஜ், இரண்டாம் நிலை காவலர் ஆகியோர் முன்னிலையில் வழக்கு சொத்தை அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி எதிரியுடன் நிலையம் வந்து அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

10. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை எனவும், எதிரியிடம் 180 ML அளவு கொண்ட Old Secret XXX Rum – 4 பாட்டில்களும், 180 ML அளவு கொண்ட Old Monster XXX Rum – 2 பாட்டில்களும், MGM DIAMOND XXX RUM – 4 பாட்டில்கள் கைப்பற்றப்படவில்லையெனவும், வழக்கு சொத்தை கைப்பற்றியபொழுது தனிநபர் சாட்சிகள் யாரும் சாட்சியாக சேர்க்கப்படவில்லையென்றும், அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வழக்கு சொத்து எண் பெறாத நிலையில் உண்மையில் எதிரியிடமிருந்து மேற்படி பாட்டில்கள் கைப்பற்றப்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது. எனவே, எதிரிக்கு சந்தேகத்தின் பலனை அளித்து விடுதலை செய்ய வேண்டும் என வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

11. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பில் சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், தாங்கள் கோணாமேடு VMC காலனிக்கு மது விலக்கு சம்மந்தமாக பார்ட்டி சகிதமாக கண்காணித்து கொண்டு செல்லும்போது ஒரு நபர் காவலர்களை பார்த்ததும் ஓடியவரை பிடித்து விசாரித்தபோது Diamond Bottle –4, Secret Rum –4, Old Monster –2 விற்பனைக்காக

வைத்துக்கொண்டிருந்தவரை கைது செய்து அவரிடமிருந்து அவை கைப்பற்றப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அ.சா.2 அவரது சாட்சியத்தில் Old Monster –4 எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக அ.சா.1 மற்றும் அ.சா.3ன் சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் யாரும் 180 ML அளவு கொண்ட Old Secret XXX Rum – 4 பாட்டில்களும், 180 ML அளவு கொண்ட Old Monster XXX Rum – 2 பாட்டில்களும், MGM DIAMOND XXX RUM – 4 பாட்டில்கள் என குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் அவர்களது சாட்சியத்தில் சம்பவயிடத்தில் 25 முதல் 30 நபர்கள் இருந்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், தனிநபர் சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் சேர்க்காதது அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு உள்ளாகுவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும், மாண்புமை உயர் நீதிமன்றம், சென்னை,

**Rathinam Vs State 2000 LW CRL (2) 575**என்ற வழக்கில்

"The next important point argued on the part of the defence is that the complainant himself cannot act as the Investigating Officer of his own case and the same cannot be done in law. This contention is supported by the judgment reported in MANU/SC/0466/1995 : AIR 1995 SC 2339 (supra) wherein it is clearly held that 'complainant should not have proceeded with the investigation of the case : that he was not only the complainant in the case, but also carried on with the investigation and examined witnesses under Section 161 Cr.P.C. Such practice to say the least, should not resorted to so that there may not any occasion to suspect fair and impartial investigation. This telling judgment of the Apex Court leaves no room to entertain any other thought and hence this preposition of law has to be accepted in toto." என்ற வழக்கில் உள்ளது.

எனவே, இவ்வழக்கில் புகார்தாரர் வழக்கின் புலன்விசாரணை அதிகாரியாக வழக்கை புலன்விசாரணை செய்து நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய இயலாது என்று தெரிய வருகிறது. மேற்படி எதிரி தரப்பு வாதங்களுக்கு அரசு தரப்பில் எந்தவொரு விளக்கமும் தராதது புகார்தாரர் தரப்பு வழக்கை பாதிக்கும் விதமாகவே அமைந்துள்ளது. இந்நிலையில் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு

சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்றும் அரசு தரப்பில் போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மெய்ப்பிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13. எனவே, மேற்கண்ட காரணங்களால் அரசு தரப்பு வழக்கானது எதிரிக்கு எதிராக சரிவர நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் அரசு தரப்பின் வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது. எனவே இவ்வழக்கில் ஏற்படும் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரி பிரிவுகள் 4(1)(a)4(1)h தமிழ்நாடு மதுபான தடுப்புச் சட்டத்தின் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. முடிவாக, இவ்வழக்கில் எதிரி மீது சட்டப் பிரிவுகள் 4(1)(a) 4(1)h தமிழ்நாடு மதுபான தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றத்தை பொறுத்து எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது

15. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை. எதிரி எழுதி கொடுத்துள்ள பிணை பத்திரங்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.யுவராஜ், முதல் நிலை காவலர். |
| 2. | அ.சா.2 | திரு. நவீன்ராஜ், இரண்டாம் நிலை காவலர். |
| 3. | அ.சா.3 | திரு. ராஜ்குமார், உதவி ஆய்வாளர். |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 06.06.2023ஆம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகசர். |
| 2. | அ.சா.ஆ.2 | 06.06.2023ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. |

**அரசு தரப்பு சான்று பொருள்** – இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்** – இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணம்** – இல்லை.

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K
JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.